<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.</u>

**முன்னிலை:- திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் மார்கழி திங்கள் 4-ம் நாள்
2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ஆம் நாள் வியாழக்கிழமை

இடைநிலை மனு எண்.2/2024
இன்
அசல் வழக்கு எண்.27/2024
(CNR.No.TNTR21-000037-2024)
...

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம் மற்றும் வட்டம், எம்.ஜி.ஆர். தெரு, எண்.30ல் வசிக்கும் கணேசன் மகன் சுமார் 50 வயதுள்ள G.பாலாஜி

... மனுதாரர்/வாதி

/எதிர்/

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், எம்.கே. சுப்பிரமணி தெரு, கதவு எண்.7/9ல் வசிக்கும் ஹேமானந்த் மகன் சுமார் 73 வயதுள்ள ஆனந்தன்

... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

மனுச் சொத்தில் மனுதாரரின் அமைதியான அனுபவத்தினை கட்டுமானம் அமைத்தோ அல்லது வேலி அமைத்தோ அல்லது வேறு எவ்வகையிலேனும் எதிர்மனுதாரர்/பிரதிவாதியோ, அவர்வகையாட்களோ இவ்வழக்கு முடியும்வரை இடைஞ்சல் செய்யக் கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1, 2-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நாள்:30.04.2024.

இம்மனுவிற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.20/-செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு கடந்த 29.11.2024 ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் R. சீனிவாசன், R. ராஜேஷ்வரபாபு, P. பிரவீனா, S. துளசியம்மாள், N.பூவரசன், S.V.சந்தியா, ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் N.G. அன்பழகன், N.A.விக்னேஷ் ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இருதரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவாணை**

1. இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.
2. அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.

**சொத்து விவரப் பட்டியல்**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருத்தணி சார் பதிவகம் திருத்தணி கிராம கணக்கு தாக்கலாவில் புஞ்சை சர்வே எண்.273/10A மற்றும் 273/14–ல் தணிகேசன் நகர் என்று பெயரிட்டு போட்டுள்ள வீட்டுமனைப்பிரிவில் 42 மனை

**இதற்கு செக்பந்தி விவரம்**

கிழக்கு பக்கம் புல எண்.276, மேற்கு பக்கம் 20 அடி அகலமுள்ள ரோடு, வடக்கு பக்கம் மனை எண்.43 பகுதி மனை, தெற்கு பக்கம் மனை எண்.41 இதன் மத்தியில், கிழக்கு மேற்கு இருபுறமும் 56 அடிகள், வடக்கு தெற்கு இருபுறமும் 22 அடிகள், ஆக 1232 சதுர அடிகள் பரப்புக் கொண்ட காலி மனை மட்டும். மேற்படி சொத்து திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்டது.

**செலவுத் தொகைப் பட்டியல்**

இருதரப்பிலும் செலவுத் தொகைப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ஆம் நாள் என் கையழுத்திடப்பட்டு, இந்நீதிமன்ற இலட்சினைப் பதிப்பிக்கப்பட்டது.

Sd/- R.D. Gurulakshmi
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.